# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| தரம் : 05 | தமிழ்மொழி<br>பெயர் / சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>1.30 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

*01.* **கீழே தரப்பட்ட பந்தியை நன்கு வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்**

நான் வெளியில் வருவது அதிகமாக இரவு நேரத்திலாகும். நான் மனிதர்களின் உடலிலே உணவைப் பெறுவேன். நான் இருளான இடங்களில் மறைந்திருப்பேன். நான் முட்டையிடுவது நீரிலாகும். என் இனத்தவர்களை அழிக்க மனிதன் பல முறைகளைக் கையாளுகின்றான். அதனால் என் இனத்தவர்களில் பலர் இறக்கின்றனர். இருந்தும் எம் இனம் இன்னும் அழியாது பெருகிக் கொண்டே இருக்கின்றது.

01. பந்தியில் குறிப்பிடப்படும் பிராணியின் பெயர் என்ன?

.......................................................................................................

02. அந்தப் பிராணியால் பரவும் நோய் ஒன்று எழுதுக?

.......................................................................................................

03. பந்தியில் உள்ள தன்மை உயர்திணை வினைச்சொல்

.......................................................................................................

04. ஒத்த கருத்துச் சொல் எழுதுக?

நண்பன் - ....................................  உடல் - ....................................

05. எதிர்க் கருத்துச் சொல் எழுதுக?

இருள் - ....................................  வெளியே - ....................................

06. பந்தியிலுள்ள காலப் பெயர்ச்சொல்

.......................................................................................................

**02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லின் கீழ் கீறிடுக.**

1. சிறுவர்கள் மனதிற்கு இதமான .................................... ( களை, கலை, கழை ) நிகழ்வுகளைப் பார்த்தனர்

2. நூல்களைக் ........................................................ கவனமாகப் பேணுதல் வேண்டும். (கிளிக்காமால், கிலிக்காமல், கிழிக்காமல் )



kalvi.lk

**03. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுங்கள்.**

தலையாய / கடமையாகும் / வேண்டியது / பொதுச்சொத்துக்களை / பாதுகாக்க / அனைவரினதும் / எங்கள்

..............................................................................................................................

..............................................................................................................................

**04. பின்வரும் வாக்கியத்தில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

1. மகனே விலங்குகள் பகுத்தறிவுடையனவா
2. என்னுடைய பாட்டி காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்று அடிக்கடி கூறுவார்.

**05. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.**

1. அகர வரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறுவது

   ..............................................................................................................................

2. நீர் நிலையின் மறுகரை

   ..............................................................................................................................

**06. கீழே தரப்பட்டவற்றிற்கு அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிந்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

**(கதிரை, வந்தோம், ஆடினீர்கள், பாடுவான், சிறுவர்கள், புத்தகங்கள், வந்த, சென்ற)**

1. உயர்திணை பன்மை படர்க்கை பெயர்ச் சொல்

   ..............................................................................................................................

2. அஃறிணை ஒருமை படர்க்கைச் பெயர்ச் சொல்

   ..............................................................................................................................

3. உயர்திணை ஒருமை எதிர்கால வினைச் சொல்

   ..............................................................................................................................

4. தன்மை பன்மை உயர்திணை இறந்தகால வினைச் சொல்

   ..............................................................................................................................

5. முன்னிலை பன்மை உயர்திணை வினைச் சொல்

   ..............................................................................................................................



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

**07. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

மூன்று + நூறு - ..................................................

மக்கள் + பேறு - ..................................................

**09. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. கி இயல்பொலியாக அமைந்த சொல்
   1) கிழவி  ஆ) அகிலம்  இ) முகில்

2. அருமை பெருமை என்ற மரபுத் தொடரின் கருத்து
   1) மிக அரியது  ஆ) மிகச் சிறப்பு  இ) மிகச் சிறியது

3. வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார்?
   1) சூரியன்  ஆ) ஆமை  இ) மண் புழு

4. மானின் ஆண் மரபு
   1) களிறு  ஆ) கலை  இ) பிணை

**10. பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.**

1. இளனி - ..................................................

2. வெக்கம் - ..................................................

**11. பின்வரும் பெண்பால் வாக்கியத்தை ஆண்பால் வாக்கியமாக எழுதுக.**

குயத்தி மிகவும் கோபமடைந்தாள்.

..........................................................................................................................................

**12. பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.**

அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி

..........................................................................................................................................

**13. பின்வரும் சுருக்கக் குறியீடுகள் உணர்த்தும் கருத்தை எழுதுக.**

இ. மி. ச - ..................................................

இ. போ. ச - ..................................................



kalvi.lk

**14. பின்வரும் சொல்லை பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் எழுதுக. ( ஒரு வாக்கியத்தில் ஐந்து சொற்களுக்கு குறையாமல் )**

பார் -

பெயர் ....................................................................................................

....................................................................................................

வினை ....................................................................................................

....................................................................................................

**15. தொடர் வாக்கியமாக எழுதுக.**

கண்ணன் வயதில் குறைந்தவன்.
கண்ணன் படிப்பிலும், விளையாட்டிலும் கெட்டிக்காரன்.

....................................................................................................

....................................................................................................

Education கல்வி

**16. பின்வரும் வாக்கியங்களுக்கு பொருத்தமான சொற்களை தெரிவு செய்து எழுதுக.**

1) தென்றல் காற்று .............................. என்று வீசியது. ( குளு குளு, விர் விர் )

2) மாட்டு வண்டி வீதியில் ........................ என்று ஓடியது. ( கட கட, பட பட )

**17. பொருத்தமான இணைமொழிகளை இனங்கண்டு தெரிவு செய்து கோடிடுக.**

1) வாழ்க்கை .................................... நிறைந்தது. ( நன்மை தீமை, மேடு பள்ளம் )

2) அவர்கள் .................. மாக வாழ்ந்தார்கள். ( ஏழை எளியவர்களு, சீரும் சிறப்பு)

**18. பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியை எழுதுக.**

பணம் இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு நண்பன் ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான்.

....................................................................................................

....................................................................................................



kalvi.lk

S.Alakesh

19. **பாலைப் போல நிலவு வானில்**
**பவனி வரப் போகுது**

பாடலில் வந்துள்ள உவமானம் யாது?

.............................................................................................................

**வந்த அலை வெள்ளியைப் போல**
**வாரி நுரை வீசும்**

பாடலில் வந்துள்ள உவமைத் தொடரை எழுதுக.

.............................................................................................................

**20. பின்வரும் வாக்கியத்தை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுங்கள்**

1) விவசாயிகள் மண்வெட்டிகளை எடுத்துக் கொண்டு காலையில் வயலுக்குச் சென்றனர்.

.............................................................................................................

**21. பின்வரும் வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

1) மரம் அசைந்து ஆடியது.

.............................................................................................................

2) கமலன் புத்தகம் எடுத்துக் கொண்டு வீடு சென்றான்.

.............................................................................................................

22. 1) ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி

............................................ பாடலின் நான்காவது வரியை கோட்டின் மீது எழுதுக.

2) "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வில்லை

........................................................................... எனும் குறளைப் பூர்த்தி செய்க.

(4 புள்ளிகள்)

**23. பொருத்தமான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1) பலாவுக்குச் சுளை போல மாம்பழத்திற்கு ..............................................

2) காகம் கரையும் போல யானை ..............................................................

(2 புள்ளிகள் )

**24. கந்தன் ஒரு வலையை விரித்தான். இந்த வாக்கியத்தில் வந்துள்ள**

1) எழுவாய்ச் சொல் எது? ..........................................

2) பயனிலைச் சொல் எது? ..........................................

3) செயற்படுபொருள் எது? ..........................................



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

**25. பின்வரும் சொற்களில் சரியாக எழுதப்பட்ட சொல்.**

1) பதற்றம், பதட்டம், பதற்ரம், பதர்ரம்

2) நடத்துநர், நடத்துனர், நடத்துணர், நடத்துனைர்.

(2 புள்ளிகள் )

**26. சுருக்கமான விடை எழுதுக.**

1) வட இந்தியாவிலே குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் கிராமத்தில் பிறந்தவர் யார்? ..........................................................................................

2) "எண்ணிய முடிதல் வேண்டும் " எனும் பாடலைப் பாடியவர் யார்? ..............................

3) நன்றி மறந்தவனை உலகம் எவ்வாறு கூறி விடும்? .........................................................

4) பிளெஸ் பஸ்கால் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?.............................................................

**27. குறியீடு குறிக்கும் கருத்தை எழுதுக.**





.................................................................. ..................................................................

28. ஒழுங்கற்று தரப்பட்டுள்ள வழிகாட்டல் குறிப்புக்களின் உதவியுடன் நடைபெற்ற சம்பவத்தை நான்கு வாக்கியங்களில் எழுதுக.
( ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியாக அமைய வேண்டும் )

| கமலன் பாடசாலை செல்லல் |
|---|

| மரக்கிளை வீதியின் குறுக்கே காணப்படல் |
|---|

| போக்குவரத்து தடைப்படல் |
|---|

| அயலவர்களின் உதவி பெற்று பாராட்டுதல் |
|---|


1. ....................................................................................................................

2. ....................................................................................................................

3. ....................................................................................................................

4. ....................................................................................................................

29. படம் பார்த்து வாக்கியம் எழுதுக.



1. ....................................................................................................................

2. ....................................................................................................................



kalvi.lk